www.StudyGuideIndia.com

Question Paper Sl. No. 10192

4358

Register Number

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | | | | |

**Part III**

# வரலாறு / HISTORY

( Tamil Version )

நேரம் : 3 மணி ] [ மொத்த மதிப்பெண்கள் : 200

## பகுதி - அ

குறிப்பு : **அனைத்து** வினாக்களுக்கும் விடை தருக. 45 × 1 = 45

I. சரியான விடையைத் தேர்ந்தெடுத்து விடைத்தாளில் எழுதுக :

1. பிளாசிப் போர் நடைபெற்ற ஆண்டு

அ) 1757

ஆ) 1764

இ) 1772.

ஈ) 1777.

2. காரன்வாலிஸ் பிரபு அறிமுகப்படுத்தியது

அ) மகல்வாரி முறை

ஆ) நிலையான நிலவரித் திட்டம்

இ) இரயத்வாரி முறை

ஈ) ஜாகீர் முறை.

3. சகௌலி உடன்படிக்கை கையெழுத்திடப்பட்ட ஆண்டு

அ) 1768

ஆ) 1814

இ) 1816

ஈ) 1813.

[ Turn over

www.StudyGuideIndia.com

4. முதல் ஆப்கானியப் போர் நடைபெற்ற போது இந்தியாவின் தலைமை ஆளுநர்

அ) ஆக்லாந்து பிரபு

ஆ) எல்லன்பரோ பிரபு

இ) ஹார்டிஞ்ச் பிரபு

ஈ) வில்லியம் பெண்டிங் பிரபு.

5. எந்த மாகாண ஆட்சிக்கு லாரன்ஸ் சகோதரர்கள் சேவையாற்றினார்கள் ?

அ) பர்மா

ஆ) பஞ்சாப்

இ) வங்காளம்

ஈ) மைசூர்.

6. 1813 ஆம் ஆண்டு பட்டயச் சட்டம் இந்தியாவில் கல்வி வளர்ச்சிக்கென ஒதுக்க வகை செய்த தொகை

அ) ஒரு லட்சம்

ஆ) இரண்டு லட்சம்

இ) மூன்று லட்சம்

ஈ) ஐந்து லட்சம்.

7. கலெக்டர் ஜாக்சன் கட்டபொம்மனை வந்து சந்திக்கச் சொன்ன இடம்

அ) மதுரை

ஆ) பாஞ்சாலங்குறிச்சி

இ) ராமநாதபுரம்

ஈ) ஸ்ரீ வில்லிபுத்தூர்.

www.StudyGuideIndia.com

8. தமிழ்நாட்டின் முந்தைய வடஆற்காடு மாவட்டத்தின் தலைநகர்

அ) வேலூர்

ஆ) ஆற்காடு

இ) கடலூர்

ஈ) ஆரணி.

9. பின்வருவனவற்றுள் 1857 ஆம் ஆண்டு கலகத்திற்கு உடனடி காரணமாக இருந்த நிகழ்ச்சி எது ?

அ) பிரிட்டிஷ் இந்திய பொருளாதாரத்தை சுரண்டியது

ஆ) டல்ஹவுசி பிரபுவின் வாரிசு இழக்கும் கொள்கை

இ) கிறித்துவ சமயப் பரப்பாளர்களின் நடவடிக்கைகள்

ஈ) கொழுப்பு தடவப்பட்ட துப்பாக்கி தோட்டாக்கள்.

10. நாட்டு மொழி செய்தித்தாள் சட்டம் கொண்டுவரப்பட்ட ஆண்டு

அ) 1878

ஆ) 1882

இ) 1898

ஈ) 1902.

11. பின்வருபவர்களில் அலிகார் இயக்கத்தை தொடங்கியவர் யார் ?

அ) சர்சையத் அகமத்கான்

ஆ) சலிமுல்லாகான்

இ) முகமது அலி ஜின்னா

ஈ) முகமது அல் ஹாசன்.

www.StudyGuideIndia.com

12. கேடா சத்தியாகிரகத்தை காந்தி யாரை ஆதரிப்பதற்காக தொடங்கினார் ?

அ) அவுரிப் பண்ணையாளர்கள்

ஆ) ஆலைத் தொழிலாளர்கள்

இ) குடியானவர்கள்

ஈ) தொழிற்சாலை பணியாளர்கள்.

13. வேதாரண்யம் உப்பு சத்தியாகிரகத்திற்கு தலைமையேற்றவர்

அ) காந்தி

ஆ) ராஜாஜி

இ) வ. உ. சி

ஈ) காமராஜ்.

14. தென்னிந்திய நல உரிமை சங்கம் தோற்றுவிக்கப்பட்ட ஆண்டு

அ) 1912

ஆ) 1914

இ) 1916

ஈ) 1917.

15. இந்திய ஒன்றியத்தில் சேர மறுத்த அரசு

அ) ஹைதராபாத்

ஆ) மைசூர்

இ) ஜெய்ப்பூர்

ஈ) திருவாங்கூர்.

16. இந்திராகாந்தி நீல நட்சத்திர நடவடிக்கை மேற்கொண்ட இடம்

அ) பஞ்சாப்

ஆ) டெல்லி

இ) காஷ்மீர்.

ஈ) அஸ்ஸாம்.

www.StudyGuideIndia.com

17. சுதந்திர இந்தியாவில் காங்கிரஸ் கட்சி அல்லாத முதல் அமைச்சரவைக்கு தலைமையேற்றவர்

அ) மொரார்ஜி தேசாய்

ஆ) வி. பி. சிங்

இ) ஏ. பி. வாஜ்பாய்

ஈ) நரசிம்மராவ்.

18. பன்னாட்டுக் கழகம் உருவாகக் காரணமாக இருந்தவர்

அ) ஜார்ஜ் வாஷிங்டன்

ஆ) ஹாரி ட்ரூமன்

இ) எப். டி. ரூஸ்வெல்ட்

ஈ) உட்ரோவில்சன்.

19. தேசிய சோஷலிஸ்ட் கட்சியை நிறுவியவர்

அ) ஹிட்லர்

ஆ) முசோலினி

இ) இரண்டாம் கெய்சர் வில்லியம்

ஈ) காரல் மார்க்ஸ்.

20. ஐ. நா. சபையின் தலைமையிடம் அமைந்துள்ளது

அ) ஜெனீவா

ஆ) தி ஹேக்

இ) நியூயார்க்

ஈ) சான் பிரான்சிஸ்கோ.

www.StudyGuideIndia.com

II. பின்வரும் வாக்கியங்களில் உள்ள கோடிட்ட இடங்களை சரியான விடைகளைக் கொண்டு நிரப்புக :

21. 1800 ஆம் ஆண்டு ஹைதராபாத் நிசாம் பிரிட்டிஷாருக்கு விட்டுக் கொடுத்த நிலப்பகுதி .................. .

22. சென்னை மாகாணத்தில் இரயத்வாரி முறையை அறிமுகப்படுத்தியவர் .................. .

23. பகிஷ்கிரிட் ஹிட்காரினி சபையை அமைத்தவர் .................. .

24. கட்டபொம்மன் தூக்கிலிடப்பட்ட இடம் .................. .

25. மகல்வாரி முறையின் கீழ் நிலவரித்திட்டத்தின் அடிப்படை அலகு .................. .

26. ரௌலட் சட்டம் நிறைவேற்றப்பட்ட ஆண்டு .................. .

27. சுதேசி நீராவிக் கப்பல் கம்பெனியை தொடங்கியவர் .................. .

28. புதிய கல்விக் கொள்கையை அறிமுகப்படுத்தியவர் .................. .

29. 'இளவரசன்' என்ற அரசியல் அறிவியல் நூலை எழுதியவர் .................. .

30. மின்சார விளக்கை கண்டுபிடித்தவர் .................. .

III. நிரல் 'அ' வின் கீழ் உள்ளவற்றை நிரல் 'ஆ' உடன் பொருத்துக.

| | 'அ' | | 'ஆ' |
|---|---|---|---|
| 31. | மெக்காலே பிரபு | — | லிட்டன் பிரபு |
| 32. | பகதூர் ஷா | — | சட்ட உறுப்பினர் |
| 33. | டெல்லி தர்பார் | — | டெல்லி |
| 34. | பார்த்திலோமியா டயஸ் | — | சீனாவின் விடிவெள்ளி |
| 35. | டாக்டர் சன்யாட்சன் | — | புயல் முனை. |

www.StudyGuideIndia.com

IV. 36. சரியான குறிப்பைக் கண்டறிக. ஒன்று மட்டுமே சரியானது.

அ) வெல்லெஸ்லி வாரிசு இழக்கும் கொள்கையை அறிமுகப்படுத்தினார்.

ஆ) வாரிசு இழக்கும் கொள்கை சட்டத்திற்கு புறம்பானது என கருதப்பட்டது.

இ) கீழ்பர்மாவை இணைப்பதற்கு வாரிசு இழப்புக் கொள்கை பயன்படுத்தப்பட்டது.

ஈ) 1857 ஆம் ஆண்டு சிப்பாய் கலகத்துக்குப் பின் வாரிசு இழக்கும் கொள்கை திரும்ப பெறப்பட்டது.

37. சரியான குறிப்பைக் கண்டறிக. ஒன்று மட்டுமே சரியானது.

அ) வேலூர் கலகத்திற்கு புதிய இராணுவ விதிமுறைகள் முக்கிய காரணம்.

ஆ) வேலூர் கோட்டையில் திப்புவின் குடும்பம் சிறை வைக்கப்படவில்லை.

இ) திப்புவின் மகன் பிரெஞ்சுகாரர்களின் உதவியை நாடவில்லை.

ஈ) கலகத்திற்குப் பின் திப்புவின் மகன்கள் பெனாங்கிற்கு கைதிகளாக அனுப்பப்பட்டனர்.

38. சரியான குறிப்பைக் கண்டறிக. ஒன்று மட்டுமே சரியானது.

அ) விக்டோரியா மகாராணியின் அறிக்கையை கானிங் பிரபு அலகாபாத்தில் அறிவித்தார்.

ஆ) மிண்டோ-மார்லி சீர்திருத்தங்கள் ஆளுநரான மார்லி பிரபுவையும் இந்தியச் செயலர் மிண்டோ பிரபுவையும் குறிக்கும்.

இ) 1919 ஆம் ஆண்டுச் சட்டம் இரட்டை ஆட்சியை மத்தியில் அறிமுகப்படுத்தியது.

ஈ) மத்தியில் ஓர் அவை கொண்ட சட்டமன்றம் நிறுவப்பட்டது.



www.StudyGuideIndia.com

39. சரியான குறிப்பைக் கண்டறிக. ஒன்று மட்டுமே சரியானது.

அ) முசோலினி சோஷலிச கருத்துக்களால் கவரப்பட்டார்.

ஆ) அவர் திருச்சபையை பெரிதும் ஆதரித்தார்.

இ) பாசிச கட்சியின் சின்னமாக ஸ்வஸ்திகா இருந்தது.

ஈ) பாசிச கட்சியின் உறுப்பினர்கள் சிவப்பு வண்ண சட்டை அணிந்திருந்தனர்.

40. சரியான குறிப்பைக் கண்டறிக. ஒன்று மட்டுமே சரியானது.

அ) ஜீன் 5, 1947-ல் ட்ரூமன் கோட்பாடு அமெரிக்காவில் அறிவிக்கப்பட்டது.

ஆ) ஏப்ரல் 4, 1949-ல் வட அட்லாண்டிக் ஒப்பந்தம் கையெழுத்தானது.

இ) மத்திய நாடுகள் ஒப்பந்தம் வார்சா ஒப்பந்தம் என்றும் அழைக்கப்படுகிறது.

ஈ) டியன் பியன் பூ தாக்கப்பட்டதால் கொரியப் போர் மூண்டது.

V. கீழ்க்காணும் கூற்றுகளில் எது சரி, எது தவறு என்பதனைக் குறிப்பிடுக.

41. நான்காம் மைசூர் போருக்குப் பிறகு, திப்புவின் குடும்பம் வேலூர் கோட்டைக்கு அனுப்பப்பட்டது.

42. வேலூர் கலகத்தின் போது ஆங்கிலேய இராணுவ அதிகாரிகள் ஒருவர் கூட கொல்லப்படவில்லை.

43. ஈஸ்வர சந்திர வித்யாசாகர் விதவை மறுமணத்தை எதிர்த்தார்.

44. அச்சு இயந்திரத்தை முதலில் கண்டுபிடித்தவர் காக்ஸ்டன்.

45. கியூபா ஏவுகணை நெருக்கடியின் போது அமெரிக்கா தனது ஏழாவது அணு ஆயுத கப்பற்படையை அனுப்பியது.

www.StudyGuideIndia.com

## பகுதி - ஆ

VI. *குறிப்பு:* i) ஏதேனும் **பதினைந்து** வினாக்களுக்கு மட்டும் சிறுகுறிப்பு வரைக.

ii) ஒவ்வொன்றிற்கும் மூன்று குறிப்புகள் அளித்தல் வேண்டும். $15 \times 3 = 45$

46. பிட் இந்தியச் சட்டம்

47. பர்தா முறை

48. இரஞ்சித்சிங்

49. பானர்மென்

50. ராணி லெட்சுமி பாய்

51. கர்னல் ஜில்லெஸ்பி

52. இல்பர்ட் மசோதா சர்ச்சை

53. சுவாமி விவேகானந்தர்

54. மிதவாத தேசிய தலைவர்கள்

55. முஸ்லீம் லீக்

56. சுயராஜ்ய கட்சி

57. சுப்ரமணிய பாரதி

58. பிராமணர் அல்லாதார் இயக்கம்

59. பேரரசியின் அறிக்கை

60. பசின் உடன்படிக்கை

61. பெர்டினாண்ட் மெகல்லன்

[ Turn over

www.StudyGuideIndia.com

62. முத்திரைத்தாள் சட்டம்

63. ரூசோ

64. போல்ஷ்விக்குகள்

65. ரோம்-பெர்லின்-டோக்கியோ அச்சு.

## பகுதி - இ

VII. *குறிப்பு :* i) பின்வருவனவற்றில் வினா எண் 77 உள்பட ஏதேனும் பத்து வினாக்களுக்கு மட்டும் விடை தருக. வினா எண் 77 -க்கு கட்டாயமாக விடையளித்தல் வேண்டும்.

ii) ஒவ்வொரு வினாவிற்கும் 100 வார்த்தைகளுக்கு மிகாமல் விடை தருக.

10 × 6 = 60

66. அ) 1773-ம் ஆண்டு ஒழுங்கு முறைச் சட்டத்தின் நிறை குறைகள் யாவை ?

*அல்லது*

ஆ) மூன்றாம் மைசூர் போருக்கான காரணங்களை விவாதிக்க.

67. அ) துணைப்படைத் திட்டத்தின் முக்கிய கூறுகளை குறிப்பிடுக.

*அல்லது*

ஆ) பிண்டாரிகள் பற்றி நீ அறிந்தவற்றை கூறுக.

68. அ) பெண்டிங் பிரபுவின் சமூக சீர்திருத்தங்களை விவரி.

*அல்லது*

ஆ) இந்திய கைத்தொழில்கள் பற்றி குறிப்பு வரைக.

www.StudyGuideIndia.com

69. அ) ஜாதி முறையின் கீழ் பின்பற்றப்பட்ட வேற்றுமைகளைக் களைய சீர்திருத்தவாதிகள் மேற்கொண்ட நடவடிக்கைகளை விவாதிக்க.

*அல்லது*

ஆ) 1801 ஆம் ஆண்டு தென்னிந்திய கலகத்தைப் பற்றி ஒரு குறிப்பு வரைக.

70. அ) 1806 ஆம் ஆண்டு வேலூர் சிப்பாய் கலகத்துக்கான காரணங்களை ஆய்க.

*அல்லது*

ஆ) 1857 ஆம் ஆண்டு கலகத்தின் முக்கிய விளைவுகளை ஆய்க.

71. அ) இராமலிங்க அடிகளின் கொள்கைகளை விவரி.

*அல்லது*

ஆ) விடுதலை இயக்கத்தில் தன்னாட்சி இயக்கத்தின் பங்கினை விளக்குக.

72. அ) ஜாலியன் வாலாபாக் படுகொலை பற்றி குறிப்பு எழுதுக.

*அல்லது*

ஆ) நீதிக்கட்சியின் கல்வி சீர்திருத்தங்களை விவரி.

73. அ) 1909 ஆம் ஆண்டு மிண்டோ-மார்லி சீர்திருத்தங்களின் பிரிவுகளை அணுகி ஆய்க.

*அல்லது*

ஆ) இந்திராகாந்தியின் ஆட்சி பற்றி குறிப்பு வரைக.



www.StudyGuideIndia.com

74. அ) மறுமலர்ச்சியின் விளைவுகளை ஆய்க.

*அல்லது*

ஆ) புவியியல் கண்டுபிடிப்புகளுக்கான காரணங்களைக் கூறுக.

75. அ) பிலடெல்பியா மாநாடு பற்றி குறிப்பு வரைக.

*அல்லது*

ஆ) இங்கிலாந்தில் தொழிற்புரட்சியின் போக்கை விவரி.

76. அ) இத்தாலிய பிரதமராக முசோலினி இருந்த போது மேற்கொண்ட மறுசீரமைப்பு நடவடிக்கைகள் யாவை ?

*அல்லது*

ஆ) பிரெஞ்சுப் புரட்சியின் விளைவுகள் பற்றி குறிப்பு எழுதுக.

77. அ) மா சே துங் பற்றி ஒரு குறிப்பு வரைக.

*அல்லது*

ஆ) அணு ஆயுதப்பரவல் தடைச் சட்டத்தின் முக்கியக் கூறுகளைக் கூறுக.

www.StudyGuideIndia.com

## பகுதி - ஈ

VIII. *குறிப்பு :* i) ஏதேனும் ஐந்து வினாக்களுக்கு ( வினா எண் **84** உள்பட ) விடை தருக. வினா எண். **84** -க்கு கட்டாயமாக விடை தருதல் வேண்டும்.

ii) ஒவ்வொரு வினாவிற்கும் 200 வார்த்தைகளுக்கு மிகாமல் விடை தருக.

5 × 10 = 50

78. அ) டல்ஹௌசி பிரபுவின் சீர்திருத்தங்களை மதிப்பிடுக.

*அல்லது*

ஆ) மகளிர் விடுதலைக்காக இயற்றப்பட்ட சமூக சட்டங்களை தொகுத்து எழுதுக.

79. அ) ரிப்பன் பிரபுவின் சீர்திருத்தங்களை விவரி.

*அல்லது*

ஆ) இந்தியாவில் தேசியம் தோன்றுவதற்கான காரணங்களை ஆய்க.

80. அ) விடுதலை இயக்கத்தில் தமிழ்நாட்டின் பங்கினை ஆய்க.

*அல்லது*

ஆ) 'ஜவஹர்லால் நேரு நவீன இந்தியாவின் சிற்பி' எனக் கருதப்படுகிறார். கருத்துக் கூறுக.

www.StudyGuideIndia.com

81. அ) வாரன் ஹேஸ்டிங்ஸ் மேற்கொண்ட சீர்திருத்தங்களை விவரி.

*அல்லது*

ஆ) காரன்வாலிஸ் மேற்கொண்ட சீர்திருத்தங்களை ஆய்க.

82. அ) பன்னாட்டுக் கழகத்தின் சாதனைகளை ஆய்க.

*அல்லது*

ஆ) 1917 ஆம் ஆண்டு ரஷ்யப் புரட்சிக்கான காரணங்களை ஆய்க.

83. அ) உலகளாவிய பயங்கரவாதத்தின் தாக்கத்தை மதிப்பிடுக.

*அல்லது*

ஆ) ஐ. நா. அவையின் முக்கிய உறுப்புகள் யாவை ? விளக்குக.

84. அ) இந்திய வரைபடத்தில் கீழ்க்கண்ட ஐந்து இடங்களைச் சுட்டிக் காட்டுக :

i) ஹைதராபாத்

ii) டெல்லி

iii) ஜான்சி

iv) வங்காளம்

v) நாக்பூர்.

டல்ஹௌசியின் கீழ் ஆங்கிலேயர் இருப்பிடங்களைச் சுட்டிக் காட்டுக.

*அல்லது*

www.StudyGuideIndia.com

ஆ) 1750 முதல் 1800 வரையான காலத்திற்கு காலக்கோடு வரைக. அதில் ஐந்து முக்கிய நிகழ்வுகளை குறிப்பிடவும். ( இந்திய வரலாறு பகுதியில் )

*அல்லது*

இ) இரண்டாம் உலகப்போரின் போது நிகழ்ந்த முக்கிய ஐந்து முதன்மை நிகழ்ச்சிகளுக்கான காலக்கோடு காட்டி வரைக.

www.StudyGuideIndia.com